ஆட்சியாளருக்கு வைத்யநாதய்யர் 'சர்டிபிகேட்'!

Phone No. 4502
விலை அணா ஒன்று

Regd. No. M. 5458
இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (12—11—49) வெளியீடு (13—11—49) | இதழ் 89

ஏதேதோ சொன்னோம், எதைத்தான் நிறைவேற்றினோம்?

மக்கள் மனக்கோட்டைக் கட்டினர்: ஆருத்துயரில் மீளாதுழல்கின்றனர்!

நோயின் அறிகுறிகளோடு அடிப்படையையும் களையவேண்டும்

—(0)—

நாடாள வந்த நாம் நம்பிக்கைப் பெற வேண்டாமா?

ஏழை இன்னல் அகலவில்லை; ஏறிய விலைவாசி குறையவில்லை!

பொது அமைதி மசோதா மீது காங்கிரஸ் எம். எல். ஏ. கருத்துரை

"நாட்டு நிர்வாகத்தை யேற்று நடத்தும் பொறுப்பை காங்கிரஸ் மேற்கொண்டதும் விஷம்போல் ஏறியிருக்கும் விலைவாசிகள் பெரிதும் குறையுமென ஏழை மக்கள் எதிர்பார்த்து ஏங்கினர். இருக்க இடமற்றோர் தங்கள் குறை தவிர்தகப்படுமென நம்பியிருந்தனர்; உழவர் தங்களுக்கென நிலம் ஒதுக்கப்படுமெனக் கருதினர். இன்னும் அவர்களின் எண்ணம் ஈடேறியபாடில்லை" என்பதாகக் கடந்த 10-ந் தேதியன்று சென்னை சட்டசபையில் தோழர் ஏ. வைத்தியநாதய்யர் குறிப்பிட்டார்.

பொது அமைதி மசோதா மூன்றாம்முறையாகப் படிக்கப்பெற்று, நிறைவேறியதையொட்டி, சட்ட மந்திரியின் திறனை விளக்கிப் பேசவந்த தோழர் வைத்தியநாதய்யர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சட்ட மந்திரி தோழர் மாதவமேனன் பேசுகையில் தங்களது 'அடக்குமுறைச் சட்டத்தின்' அவசியத்தை விளக்கி, நோயின் அடிப்படைக் காரணங்களைக் களைவதற்கு முன்னதாக நோய்க்கான அறிகுறிகளைப் போக்கவேண்டியது இன்றியமையாததாக இருக்கிறதென்று தெரிவித்ததைத் தோழர் வைத்தியநாதய்யர் குறிப்பிட்டு, மேலும் பேசியதாவது:

"நோய்க்கான அறிகுறிகளைமட்டும் போக்க முனைவது தேர்ச்சி பெருதோரின் செயலாகும். அறிகுறிகளைப் போக்க முயற்சிக்கும்போதே, நோயின் அடிப்படைக் காரணங்களையும் தவிர்க்க முனையவேண்டும். விலைவாசிகளை மிகமிக இறக்கியாகவேண்டுமென நான் வலியுறுத்தி வந்திருக்கிறேன்."

"மக்கள் உள்ளத்தில் நாம் குடியேற்றிய நம்பிக்கைகளுளொன்று கூட நிறைவேறக்காணோம்."

தோழர் வைத்தியநாதய்யர் தொடர்ந்து குறிப்பிட்டதாவது:—

"நிர்வாகத்தில் ஊழல் சிறிதுமின்றி முழுத் திறமையும் நிலைபெற வேண்டுமெனப் பேசிக் கொண்டிருந்தோம். காங்கிரஸ் சர்க்கார் மிகவும் உயர்தரமான ஒழுக்கக் கட்டுப்பாடுகளை யெதிர்நோக்குவோமெனப் பெருவாரியான அதிகாரிகள் நடுக்கமுற்றிருந்தனர். ஆனால் நிலைமை முன்னைவிட எந்த வகையிலும் சீர்படவில்லை யென்பதை மக்கள் உணரத் தலைப்பட்டுவிட்டனர்."

தோழர் வைத்தியநாதய்யர் மேலும் சொன்னார்:—

"ஜமீன்தாரி ஒழிப்பு, மதுவிலக்கு, கோயில் நுழைவு போன்ற பெருஞ் சீர்திருத்தங்களைக் காங்கிரஸ் சர்க்கார் செய்திருக்கிறதென்பது உண்மைதான். ஆனால் கவலைதரக்கூடிய சிற்சில பெரும் பிரச்னைகள் திறமையுடன் தீர்க்கப்படவில்லை. பொருளாதாரத் துயரம், வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடுகிறது. குடிசைத் தொழில் வளர்ச்சி, நிர்வாகத் திறமை, லஞ்ச ஊழல் தவிர்ப்பு இன்னபிற—நம்மால் எதிர்பார்க்கப்பட்டவை — உருப்பெறவேயில்லை"

"அண்மையில் நடந்த தேர்தல்களில் காங்கிரசார் பெருவாரியாக வெற்றியுற்று பதவியேற்றிருக்கலாம்; ஆனால் அவர்களுக்குக் கிடைத்திருக்கும் 'வோட்'களின் எண்ணிக்கைகளைக் கவனித்துப்பார்க்குமளவில், மகிழ்ச்சியடைய காரணத்தைக் காணோம். பட்டப்பகலில் போலீஸ் ஸ்டேஷன்களுக்குப் பக்கத்திலேயே குற்றங்கள் பல இழைக்கப்படுகின்றன. நிர்வாகம் என்றளவில் ஏதோ செய்துகொண்டிருந்தால் மட்டும் போதாது. சர்க்காரும் நிர்வாகமும் மக்களின் நல்லெண்ணத்தை, நம்பிக்கையைப்பெறவேண்டும்"

சோழா வைத்தியநாதய்யா

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]

தூத்துக்குடியில் நாடகம்

26, 27-ந் தேதிகளில், தூத்துக்குடியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தபடி, 'சந்திரமோகன்—நீதிதேவன் மயக்கம்' எனு நாடகங்கள், அந்தத் தேதிகளில் நடைபெறுவதற்கில்லை. நாடக அமைப்புக்குக் காலம் போதவில்லை. நாடக சம்பந்தமான ஏற்பாடுகளைப்பற்றிக் கலந்து பேச தோழர் என்.வி. நடராசன் தூத்துக்குடி, இந்தக் கிழமை வருகிறார். நாடக தேதியும், விவரமும் பிறகு தெரிவிக்கப்படும். 'சந்திரமோகன' நாடகத்தில், தோழர் கே. ஆர். ராமசாமி நடிக்க இசைந்துள்ளார் என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணாதுரை.

பிரிட்டிஷ் முதலாளியின் கும்மாளம்!

தேசீயத் தோழர்கள் உணரட்டும்

இந்தியாவின் பொருளாதார நிலையை உயர்த்தவேண்டும் என்பதற்காகவே நாங்கள் பாடுபடுகிறோம் என்று அடிக்கடி சொல்லுகிறார்கள் நமது ஆட்சியாளர்கள். ஆனால் ஆட்சியாளருடைய முயற்சியின் விளைவால் யாருக்கு லாபம்? முதலாளி வர்க்கத்துக்கா, தொழிலாளி வர்க்கத்துக்கா என்பதை விளக்க கீழ்க்காணும் செய்தியே போதுமானதாகும். இதோ அது:—

லண்டன், நவ. 9—

கல்கத்தா டிராம்வே கார்ப்பரேஷன் தலைவரான ஸர் ஆர் கினார்க் இங்கு நடந்த கம்பெனி பங்குதாரர்கள் கூட்டத்தில் பேசுகையில்,

இந்தியாவுக்கு மகத்தான எதிர்காலம் இருக்கிறது. தொழில் துறையிலும் இதர துறைகளிலும் அது உன்னத நிலையை அடையப்போகிறது எனக்குச் சொந்தத்தில் நிரம்பப் பணம் இருந்தால் அதை சந்தோஷத்துடன் இந்தியாவில் தொழில்களில் முதலீடு செய்வேன்.'

என்று கூறினார். அவர் கூறியதை கூட்டத்தினர் ஆரவாரத்துடன் ஏற்றனர்."

'ஆடு கொழுத்தால் கசாப்புக் கடைக்காரனுக்கு லாபம்' என்பது போல் இந்தியா வளம் பெற்றால் அதன் வளத்தைச் சுரண்ட ஆவலோடு காத்துக் கொண்டிருக்கின்றனர் மேல்நாட்டு முதலாளிகள் என்பதற்கு இதைவிட வேறு சான்று என்னதேவை? இன்னும் ஒரு பிரிட்டிஷ் முதலாளி இந்தியாவின் எதிர்காலம் குறித்து கும்மாளம் போடுவதைக் கண்ட பிறகேனும் இந்நாடு எந்தப் பாதையில் போய்க்கொண்டிருக்கிறது என்பதை தேசியத் தோழர் உணரட்டும்கள்.

ஆசியாவில் மூன்றுவது அமெரிக்க வலை வீச்சு!

பாக்கிஸ்தான் பிரதமரின் அமெரிக்கப் பயணம்!

இந்தியாவின் வீம்புப்பேச்சு என்னுவது?

பாக்கிஸ்தான் பிரதமர் லியாகத் அலி கோர்கி, அமெரிக்காவிற்கு ஒரு பயணம் வந்துபோக, அமெரிக்காவின் அழைப்பு வந்து கொண்டு இருக்கிறது. இந்த அழைப்பு அமெரிக்கக் குடிஅரசுத் தலைவர் ட்ரூமெனின் மூலமாகல் உருவாகி வருகிறதாம். இந்தியப் பிரதமர் பண்டிதர் வந்து போனதை ஒத்ததாகத்தான் இதுவும் இருக்குமா என்று கேட்கப்பட்ட கேள்விக்கு, அதுவும் ஆலோசனையில் இருப்பதாகக் கூறுமென பதிலளித்துள்ளார். பின்னர் முக்கிய அதிகாரி ஒருவர் இது பற்றிக் கூறியுள்ளார். அமெரிக்காவிற்கு பாக்கிஸ்தானும் நல்லுறவு இருப்பதாகவும், பாக்கிஸ்தான வெளிநாட்டு மந்திரி இடத்திலும் நிதிமந்திரி இடத்திலும் மனங்கலந்து பேசி இருப்பதாகவும், இரு சாராருக்கும் திருப்தியளிக்கும் முறையில் பாக்கிஸ்தான் பிரதம மந்திரி அமெரிக்காவிற்கு ஒரு யாத்திரை விஜயம் செய்வது மகிழ்ச்சிதரக்கூடியதாகுமென்றும், இந்த விஷயம் துவக்கக் கட்டத்தில் இருக்கிறதாகவும் குறிப்பிட்டுள்ளார் அந்த அமெரிக்க அதிகாரி.

பாக்கிஸ்தான் பிரதமர் லியாகத்தலிக்கு, அமெரிக்கா அழைப்பனுப்புவதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை. ஆனால்; ஆழ்ந்து சிந்திக்கத்தக்க பிரச்னைகள் ஏராளமாக இருக்கின்றன. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தற்கொலைக்குப் பின்னர், அதன் காலி செய்து விட்டுப்போன ஆசியப்பகுதிகளில், குறிப்பாக இத்துணைக் கண்டமான இந்தியாவில், அதுவும் சீனாவில் கோமிண்டாங் குடை கவிழ்ந்தபிறகு, அமெரிக்காவின் பார்வை அழுத்தமாக விழுகிறது என்றால், அதில் ஏதாவது சூட்சமம் இல்லாமலா இருக்க முடியும்?

அமெரிக்காவின் கூட்டுறவால்

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]

கீழ் நாட்டுக் கலாசாரம்!

"மடகாஸ்கரில் 15000 இந்தியர் வசிப்பதாகக் கூறுவது சரியல்ல. 8000 இந்தியர்தான வசிக்கின்றனர். அரசியல் காரணங்களுக்காக இந்தியர் எவரும் அங்கிருந்து வெளியேற்றப்படவில்லை. கள்ளமார்க்கெட், கள்ள நாணய தயாரிப்பு முதலிய குற்றங்களுக்காக கடந்த 3 ஆண்டுகளில் 20 இந்தியர் வெளியேற்றப்பட்டனர்."

மாலை மணி

சென்னை 1[illegible]—11—49 சனிக்கிழமை

தொல்லை தீர்ந்ததா...?

"ஜே. வி. பி. கமிட்டி சிபார்சில். குறிப்பிட்ட எல்லைக்கு உட்பட்டு ஆந்திர மாகாணம், ஏற்படுவதற்கு காங்கிரஸ் கமிட்டி உடன்படுகிறது."

"சென்னை நகரையும், சென்னையைச் சுற்றியுள்ள இரு மொழி நிலப்பரப்புகளையும் ஒரு மாவட்டமாக அமைத்து. உடனடியாக. மத்திய சர்க்காரின் நிர்வாகத்தில் கொண்டுவருவது."

"தமிழ் மாகாணத்திற்கும் தனித் தனி தலைநகர்கள் தீர்மானிக்கப்படும்வரை. இரு மாகாண சர்க்கார்களின் தலைநகரும் சென்னையிலேயே இருக்க அனுமதிக்குமாறு இந்திய சர்க்காரைக் கேட்டுக் கொள்வது."

சென்னை நகரம் யாருக்கு என்ற பிரச்னையில் முடிவு காண முடியாமல், இரண்டொரு ஆண்டுகளாக ஏற்பட்டு இருந்த சிக்கல் நேற்றோடு தொலைந்து விட்டது என்றே கூறி விடலாம். சென்னை நகரை, ஆந்திரர்கள், அபகரித்துக் கொள்ளாமல் இருக்க, இனி எவருடைய தலையையும் கொடுக்க வேண்டிய நிர்பந்தம் இருக்காது. அதற்கான அகச்சான்று புறச்சான்று தேடியலையும் சிலருக்கிருந்த பெருந்தொல்லையும் இனி எவருக்கும் இருக்கத் தேவை இல்லை.

ஜவகர்—பட்டேல்—பட்டாபி அறிக்கையின்படி. ஆந்திர மாகாணத்தை அமைத்துக் கொள்ள ஆந்திரமாகாண காங்கிரஸ்காரியக்கமிட்டிமுடிவிற்கு வந்திருக்கிறது. சென்னைநகரத்தைக் குறித்து எழுந்த கொந்தளிப்பின் காரணமாக, இருமொழியினரிடத்திலும் ஏற்பட்டுவிட்ட பகைமை உணர்ச்சி, இனியாவது இரு சாராரிடத்திலும் மறைந்து ஒழிவதுதான் விரும்பக்கூடியதாகும். இந்தச் சூழ்நிலையை உண்டாக்க, விஜயவாடாவில் கூடிய ஆந்திரா கா. காரியக் கமிட்டியினர் அறவே தவறிவிட்டிருக்கிருர்கள் என்பதைப் பார்க்கும்பொழுது மனவேதனை ஏற்படாமல் இருக்க நியாயமில்லை.

சென்னையையும், அதனைச் சுற்றியுள்ள ஆந்திரம் — தமிழ் ஒருங்கே வழங்கும் நிலப்பரப்பையும் ஒன்ருக்கி, அதனை டில்லியின் நேரடியான ஆட்சியின்கீழ்கொண்டுவர வேண்டுமென்று, மத்திய சர்க்காருக்கு அறிவுரை கூறுகிறது ஆந்திரக் குழு. எதைவேண்டுமானாலும் கூற எவருக்கும் உரிமை இருக்கிறது என்பதை நாம் மறுக்கவில்லை; ஆனல், ஆந்திரரின் இந்தக்கூற்றுக்கு துளியாவது அவசியமிருக்கிறதா என்பதுதான் நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டிய விஷயமாகும். கோரிக்கையில் பொருள் இருக்கிறதா, இல்லையா என்பது வேறு விஷயம். இந்தக் கோரிக்கை நிறைவேறுவதாகவே வைத்துக்கொண்டாலும், இதனல் ஆந்திர மாகாணத்துக்கு ஏற்பட இருக்கிற நன்மை என்ன என்பதைத்தான் நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. உடனடியாக நஷ்டமிருக்கிறது என்று வேண்டுமானல் கூறலாம். ஆந்திர மாகாணத்தில் சேர்க்கப்பட வேண்டுமென்று கோரப்படுகிற, சித்தூர், நெல்லூர் ஆகிய இரு ஜில்லாக்களிலும் உள்ள இரு மொழி வழங்கப்படும் கிராமங்கள்,உருவாக இருக்கும் ஆந்திர மாகாணத்திலிருந்து விலக்கப்பட்டு, வேறு அமைப்பில் சேர்க்கப்பட்டு, ஆந்திரமாகாணத்தின் நிலப்பரப்பு கொஞ்சம் சுருங்கும். தமிழ் நாட்டுக்கும் இதே கதி தானே ஏற்படும் என்றும் கேட்கலாம். அதுவும் உண்மைதான்; அதுவல்ல இதில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது தங்கள் நிலப்பரப்பையும் குறைத்துக்கொண்டு, தமிழர் நிலப்பரப்பையும் குறைக்கச் செய்து, சென்னை நகரோடு இவைகளை எல்லாம் சேர்த்து. அதை டில்லியின் அரவணைப்புக்கு உள்ளாக்கி விடுவதால், ஆந்திர மாகாணம் அடையப் போவதென்ன என்பதுதான் முக்கியம், தனக்கு இரண்டு கண் போனாலும் போகிறது, தமிழனுக்கு ஒரு கண்ணாவது போனல் போதும் என்ற, சில ஆந்திரத் தலைவர்களுக்கு இருக்கும் பொருமைக் குணம் தான், இந்தக் கோரிக்கையினல் தெளிவாகிறது.

பட்டாபி சீதாராமையா இதே கருத்தைத்தான் சில நாளைக்கு முன் கூறி இருக்கிருர். அதை ஒட்டித்தான்,இந்தக்கோரிக்கை உருவாக்கப்பட்டு இருக்கிறது. பட்டாபியே, இதனை எழுதி இருக்கக்கூடும் என்று கூறுவதுகூட தவருகாது. பட்டாபி, சென்னை நகரைப்பற்றிய இந்த நூதன ஏற்பாட்டை வெளியிட்டதுவிஷமத்தனமாக இருக்கலாம் — வயிற்றெரிச்சலாக இருக்கலாம் — இன்னும் எதுவாகவேண்டுமானாலும் இருக்கலாம். இவ்வளவும், பட்டாபியின் நூதன திட்டத்தைக் கேட்டதும் நம்மில் சிலருக்கு ஏற்பட்ட கோபத்தின் அளவை குறித்துக் காட்டும் சொற்களேயன்றி வேறல்ல. அவர் கூற்றுக்கான மூல காரணத்தை, இந்தச் சொற்களால் விளக்க முடியாது,

பட்டாபி, இவ்வாறு விஷமத்தனமாகக் கூறுவதற்குள்ள காரணம் யாதாக இருக்க முடியும்? கூறப்பட்ட கொஞ்சநேரத்திற்கு முன்பு பட்டாபியின் மூளையில் இந்த விசித்திரமான யோசனை இடம் பெற்றிருந்ததா இல்லையா? இது பற்றி ஏற்கனவே "ஜே. வி. பி." குழுவைச் சேர்ந்த மற்ற இரு உறுப்பினர்களான பண்டிதர், பட்டேல் முதலியவர்களிடம் பட்டாபி கலந்து ஆலோசிக்காமல் இருந்திருப்பாரா? முதற் முதலாகப் பட்டாபியின் நினைப்பிலேதான் இத்திட்டம் உறுவெடுத்ததா? அல்லது மருல் இவர்களின் கருத்திலே கருவுற்றதா இது? என்பன போன்ற நேர்மையான கேள்விகளுக்கெல்லாம் நாம் சமாதானம் தேடியாக வேண்டும். இவ்வளவுக்கும் விடை காண வேண்டுமானல், சென்னை நகரைக் குறித்து எழுந்தப் பிணக்கைத் தீர்த்துவைக்க ஏற்படுத்தப்பட்ட 'ஜே. வி. பி.' குழுவின் அறிக்கையை அலசிப்பார்த்தாக வேண்டும். ஆந்திரமாகாண அமைப்புக்கு சென்னை நகர் வேண்டுமென்பதை ஆந்திரர்கள் கைவிட வேண்டுமென்று இருக்கிறதே யன்றி, 'சென்னை நகரம் தமிழ் மாகாணத்தோடுதான் இருப்பது நியாயமானதாகும்' என்று சந்தேகத்திற்கிட மில்லாமல் சுட்டிக்காட்டவில்லை. 'ஜே. வி. பி.' அறிக்கை. சென்னை நகரம் தமிழர்களுக்குத் தான் சொந்தமானது என்ற உறுதிப்பாடு, மூவர் அறிக்கையில் இல்லாதிருக்கக் காரணம் என்ன? என்றென்றும்சென்னை நகரம் தமிழர்களுடையதாக இருந்து வரும் காரணத்தால் சென்னையை அக்கிரமமாக கேட்டுக் கொண்டிருக்கும் ஆந்திரர்களுக்குச் சென்னையைக் கைவிட வேண்டுமென்று சொல்வது மட்டும் போதும் என்று மூவர் குழு எண்ணி இருக்கக் கூடுமா என்று யோசிப்போம். மூவர் குழுவிற்கு வரலாறுதெரியாதா என்ன? வரலாற்று உண்மையைக் கூற மூவர் குழு தயக்கம் காட்டுவதற்கு எந்த விதக் காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை. உறுதியாகக் கூறவேண்டிய ஒன்றைப்பற்றி மூவர்குழு வேண்டுமென்றே மௌனம் சாதித்து விட்டிருக்கிறது என்ருல், அதில் ஏதோ ஒரு மர்மம் இருக்கிறது என்று யூகிக்கவேண்டியதாக இருக்கிறது. ஆந்திரர்களுக்கு சென்னை நகரம் கிடையாது என்று திட்ட வட்டமாகக் கூறினது போலவே, சென்னை நகரம்,தமிழர்களுடையதுதான் என்று வலியுறுத்தி மூவர் குழு அறிவித்திருந்தால், பட்டாபி பகிரங்கமாக சென்னையைக் குறித்து புதுக்கரடி ஒன்றை விட்டிருக்கத் துணிவேற்பட்டிருக்காது — அதையொட்டி ஆந்திரா காங்கிரஸ் காரியகமிட்டி விஷமத்தனமாகத் தீர்மானித்தும் இருக்காது. எனவே,ஆந்திரமாகாண ஏற்பாட்டைப் பொறுத்தவரை சென்னை நகரப் பிரச்சினை தீர்ந்துவிட்ட விஷயமாகிவிட்டது. ஆனல்' மூவர் குழுவின் பார்வையில், சென்னை நகரம் இன்னும் சிக்கலில் மாட்டிக் கிடக்கும் பிரச்சினையாகவே இருக்கிறது என்றுதான் கூற வேண்டியதாக இருக்கிறது. மூவர் குழுவின் மனநிலையைத்தான் பட்டாபி முன் கூட்டி அறிவித்திருக்கிருர் என்று நாம் தீர்மானித்திருக்கிருேம். மூவர் குழுவில் பட்டாபியும் ஒரு உறுப்பினராக இருப்பதால், அவர் கூறுவது, அவரின் சொந்தக் கருத்தாக மட்டுமே இருக்கும் என்று நம்ப முடியவில்லை. நம்மைப் பொறுத்தவரையில், சென்னைக்கு ஏற்பட இருந்த ஒரு தொல்லை நீங்கிவிட்டது. மற்றுமொரு தொல்லை ஏற்படுமா? இல்லையா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். அது வரையில் தமிழர்கள் விழிப்பாக இருந்தாக வேண்டும். தமிழ் மாகாணத்திற்கும் ஆந்திர மாகாணத்திற்கும் தனித்தனி தலைநகரங்கள் நிர்மாணம் ஆகும் வரையில் சென்னை நகரிலேயே இரு மாகாண அரசுகளும் நடைபெற டெல்லி அனுமதிக்க வேண்டுமென்றும்கோரப்பட்டிருக்கிறது. டெல்லியை அனுமதிகேட்பதிலே குற்றமொன்றுமில்லை. காங்கிரஸ் ஆட்சியில் மாகாணங்கள் ஒரு ஜில்லா போர்டு போன்ற அந்தஸ்தில் இருப்பதால், ஆந்திர மாகாண அரசும்தற்காலிகமாக சென்னை நகரிலேயே நடக்க டெல்லியைக் கேட்டுக் கொள்வதில், தத்துவ பூர்வமான தவறு ஒன்றும் இருப்பதாக இல்லை. அதைக் கண்டு நாம் கோபிக்கவும் அவசியமில்லை. சென்னை, தமிழர்களுக்கு இல்லையென்ற முடிவின்மீது, டெல்லிக்குக் கோரிக்கை வெளியிட்டு இருப்பதுதான் மன்னிக்க முடியாத விஷமமாகும். இதனல், ஆந்திரர்-தமிழர் என்ற பகைமை உணர்ச்சி மேலும் சில காலம் நீடிக்கத்தான்செய்யும்.எனவே, சென்னை நகர் விஷயமாக ஓர் இன மக்களிடம் ஏற்பட்டு விட்ட தொல்லை தீர்ந்ததா என்றே நாம் சந்தேகப்படுகிருேம்.

"மாலைமணி" வளர்ச்சி ஏற்பாட்டுக் கூட்டம்

"மாலை மணி" இதழ். திராவிடத் தோழர்களின் ஆதரவு பெற்று வளர்ந்து வருவது குறித்து மகிழ்கிறேன்.

"மாலை மணி"யைப் பெரிய அளவிலும். உலகச் செய்திகளைக் கொண்டதாகவும் வெளியிட வேண்டுமென்பது. நண்பர்களின் விருப்பம்.

"மாலை மணி" இதழை. இம்முறையில் வெளியிட. தக்கதோர் ஏற்பாடு செய்ய விரும்புகிறோம்.

இது சம்பந்தமாக. பங்கு கொள்ளக்கூடிய அக்கரையுள்ளவர்களைக் கலந்தாலோசித்து ஏற்பாடுசெய்ய இம்மாதம் 15-ந் தேதி மாலை, 6-மணிக்கு. 'மாலை மணி' நிலையத்தில. ஒரு கூட்டம் நடைபெறும்.

பத்திரிகைக்குப் புதிய ஏற்பாடு அமைப்பதில், பங்கு கொள்ளும்நோக்கமுள்ள. திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் வந்திருந்து. தங்கள் ஒத்துழைப்பைத் தரக்கோருகிறேன்.

அன்பன்,

அண்ணதுரை

பொதுச் செயலாளர்,

திராவிட முன்னேற்றக் கழகம்.

கள்ளமார்க்கெட் கழுதைகளுக்கு அன்பழைப்பனுப்பும் ஆட்சிபீடம் !

'தூக்குமேடையேற வேண்டியவர்' 'தூய மனிதர்' ஆகும் விந்தை!

" அரிய சந்தர்ப்பம்! நழுவ விடாதீர்!"

இதுவரையில் 'இரகசியமாக' எவ்வளவோ சம்பாதித்திருப்பீர்கள் 'சுறுப்பில்' கிடைத்த லாபம் சனமாகவேதானிருக்கும். வருமான வரிகாரருக்கும் கூடக்காய் கொடுத்து விட்டீர்கள். அதனுல் ஒன்றும் மூழ்கிப்போய்விடவில்லை. இளர்ச்சிக்காரர்களின் கூக்குரல் அதிகமாகி வருகிறது. எனவே, எதாவது ஒரு வகையில் நாம் கணக்குத் தீர்த்துக் கொண்டே ஆகவேண்டும். இதற்காக உமாளுக்கொரு அரிய சந்தர்ப்பத்தை 'சிருஷ்டித்'திருக்கிருேம். இதை நழுவ விடாதீர்கள். அப்படி நழுவவிட்டீர்களாயின் மறு சந்தர்ப்பம் வாய்ப்பதரிது. விரைவிலொரு அறிக்கை வரும். அந்த அறிக்கை வந்த இரண்டு மாதகாலத்துக்குள், நீங்கள் இரகசியமாய் சம்பாதித்தப் பொருள்களுக்கான வருமான வரியை நீங்களாகவே வந்து, ஏதோ கணக்குக் காட்டி, கட்டிவிட்டுப்போய்விடுங்கள். அத்துடன் சுமுகமாகத் தீர்த்துக்கொள்வோம்."

என்று பொருள்பட இந்திய சர்க்கார், கள்ளமார்க்கெட்—கொள்ளை லாபக் கழுதைகளுக்குத் 'தாக்கீது' ஒன்று விடுத்துள்ளது.

கள்ளமார்க்கெட்காரரைத் தூக்கிலிடவேண்டுமென்று நேரு 'கர்ஜித்த' காலம் போய், இப்போது கள்ளமார்க்கெட்காரர் என்று கூப்பிடவே அஞ்சி 'இரகசிய லாபக்காரர்' என்றழைக்க வேண்டிய நெருக்கடியான காலம் வந்திருக்கிறது. 'திருட்டுத்தனமாய்ப் பதுக்கிவைத்திருந்தோர்' என்று அழைத்த காலம் போய், 'வரியினின்றும் தப்பியோர்' என்று அழைக்கவேண்டிய அவசியம் வந்திருக்கிறது. என்ன ஜனநாயகம்! என்ன சுயராஜ்யம்! இதுவன்ரோ மக்களாட்சி!

கள்ளமார்க்கெட்டில் பெரும் பொருளீட்டி, பதுக்கிவைத்திருப்போருக்கு சர்க்கார் விடுத்திருக்கும் 'அன்பழைப்பொன்றில்' தாங்கள் சம்பாதித்த தொகைக்கேற்றநான வரியையும் கணக்கையும் தாங்களாகவே ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் கொண்டுவந்து கட்டிவிட்டால் போதுமென்றும், இப்படிச் செய்வோர் மீது எவ்வித வழக்கும் தொடரப்படமாட்டாது; தண்டனையும் தரப்படமாட்டாதென்று உறுதி கூறியுள்ளனர்.

எப்படிக் கட்டவேண்டும் எதற்குள் கட்டவேண்டுமென்பவை பற்றிய விவரங்களை விரைவில் தெரிவிப்பதாக சர்க்கார் அறிவித்துள்ளனர்.

ரஷ்யப் புரட்சி விழா

புதுடெல்லியிலுள்ள சோவியத் அரசுப் பிரதிநிதி காரியாலயம் அடியிற் கண்ட பத்திரிகைக் குறிப்பை வெளியிட்டுள்ளது. "மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியின் 32-வது ஆண்டு விழா விழாவையொட்டி வாழ்த்து-பாராட்டுரைகளனுப்பி வைத்த ஸ்தாபனங்களுக்கும் தனிப்பட்டோருக்கும் இந்தியாவிலுள்ள சோவியத் ரஷ்ய அரசுப் பிரதிநிதிகாரியாலயம் தனது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறது.

கோவை மாவட்ட தி. மு. க. அமைப்புக் கூட்டம்

மாவட்ட மக்களின் மட்டிலார்வப்பேருணர்ச்சி!

3 நாள் சுற்றுப்பயணம்: பற்பல இடங்களில் பொதுக் கூட்டம்

உயர்நிலைப்பள்ளிகளில் அண்ணாத்துரைக்கு வரவேற்பு

பழனிச்சாமி-எஸ்.ஆர்.எஸ்.-சம்பத்தும் கலந்துகொண்டனர்

கோவை, நவ. 7—

நேற்று காலை கோவை திராவிட முன்னேற்றக் கழகக் கட்டிடத்தில் கோவை மாவட்ட தி. மு. க. அமைப்புக் கூட்டம் பெத்தாம்பாளையம் தோழர் பழனிச்சாமி தலைமையில் நடைபெற்றது. மாவட்டத்தின் பல பாகங்களைச் சேர்ந்த கழக முன்னணித் தொண்டர்களும் வந்து குழுமியிருந்தனர்.

கூட்டத்தில் மாவட்ட நிர்வாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கூனூர், நீலகிரி, கள்ளிக்கோட்டை முதலான இடங்களிலுள்ள தி. மு. கழகங்களும் தற்காலிகமாக கோவை மாவட்டக் கழகத்துடன் இணைந்திருப்பதென முடிவு செய்யப்பட்டது.

மாவட்டத்தில் செய்யப்பட்டு வரும் முன்னேற்றக் கழகப் பணியைப் பற்றி விளக்கி தோழர்கள் பழனிச்சாமி, ஈ. வெ. கி. சம்பத், பொள்ளாச்சி நடராசர், கனகராசன், எஸ் ஆர். சுப்பிரமணியம், பி. ஆர் பொன்னுச்சாமி ஆகியோர் பேசினர்.

முடிவில், திராவிட முன்னேற்றக் கழக மாகாணப் பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாத்துரை, கழக வளர்ச்சி சம்பந்தமான யோசனைகளையும், அறிவுரைகளையும் கூறினர். அமைப்புக் கூட்டம் முடிந்ததும்வந்திருந்த தோழர்கள் அனைவருக்கும் கோவை 'ஸ்டார் பேக்கரில்' தோழர் கோபால் தனது இல்லத்தில் ண்பகல் உணவு அளித்தார்.

கோவைவிட்டுப் புறப்பாடு

அன்று மாலை தோழர்கள் அண்ணாத்துரை, காஞ்சி வி. பி. சாமி, சம்பத்து, பழனிச்சாமி, எஸ். ஆர். சுப்பிரமணியம், உடுமலை கனகராசன், பொள்ளாச்சி நடராசர், கோவை கோபால், வேட்டைக்காரன் புதூர் கழகத் தோழர்களுடன் கோவையிலிருந்து புறப்பட்டு நெகமம் திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழாக் கூட்டத்திற்குச் சென்றனர்.

நெகமம் பொதுக்கூட்டம்

நெகமம் தி. மு. க. துவக்க விழா மாலை 5 மணிக்குப் பெத்தாம்பாளையம் தோழர் பழனிச்சாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் உடுமலை கனகராசன், எஸ். ஆர் சுப்பிரமணியம், சம்பத், அண்ணாத்துரை ஆகியோர் சொற்பொழிவாற்றினர். திரளான மக்கள் குழுமியிருந்தனர். எங்கும் மகிழ்ச்சி கரை புரண்டோடியது

பொள்ளாச்சியில் கொடியேற்று விழா

சுமார் 7-30 மணிக்குக் கூட்டம்முடிவடைந்ததும் தோழர்கள் யாவரும் பொள்ளாச்சிக்குப் புறப்பட்டுச் சென்றனர் அங்கு மரக்கடை பாலத்தில். தி. மு. கழகக் கொடி யேற்று விழாவைத் தோழர் அண்ணாத்துரை நடத்தி வைத்தார்

வேட்டைக்காரன் புதூர்

பிறகு அனைவரும், வேட்டைக்காரன் புதூர் தி. மு. கழகத் துவக்க விழாவிற்குச் சென்றனர் விழா, தோழர் தம்பி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள்சம்பத், அண்ணாத்துரை ஆகியோர் பேசினர். திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழாவைக் காண பெருவாரியான மக்கள் திரண்டிருந்தனர். துவக்க விழா முடிந்ததும் தோழர்கள் யாவரும் பொள்ளாச்சிக்கு இரவு 8 மணிக்குத் திரும்பி வந்தனர்.

பொள்ளாச்சி காணுப்பெருங் கூட்டம்

பொள்ளாச்சி திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா தோழர் பழனிச்சாமி தலைமையில் நடைபெற்றது. பெருந்திரளான மக்கள் துவக்க விழா காணக் குழுமியிருந்தனர்; பொள்ளாச்சியிலேயே, இது போலக் கூட்டம் கூடியதில்லை யென்று கூறும்படியாகபெருவாரியான மக்கள் திரண்டிருந்தனர்.

பொதுச் செயலாளர் தோழர் அண்ணாத்துரைக்கு நகர திராவிட முன்னேற்ற வாலிபர் கழகம்மரம்பேட்டை திராவிடப் பெருங்குடி மக்கள் சார்பிலும். வாழ்த்திதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன. பிறகு பின்வரும் கழகங்களால் தோழர் சி. என். ஏவுக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன

(1) பொள்ளாச்சி ரயில்வே தொழிலாளர்கள்.

(2) ஆபரணத் தொழிலாளர்கள் சங்கம்.

(3) ரோப் வேலாரித் தொழிலாளர்கள்.

(4) ஆதித்திராவிடர் சங்கம்.

(5) திராவிட முன்னேற்றக் கழகம்.

(6) பகுத்தறிவு வாசக சாலை

(7) வால்பாறை திராவிட முன்னேற்றக் கழகம்.

இன்னும் பல தனிப்பட்ட கழகத் தோழர்களாலும் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

தி. மு. க. வளர்ச்சி நன்கொடை

அதன் பிறகு திராவிட முன்னேற்றக் கழக வளர்ச்சிக்கெனத் தோழர் அண்ணாதுரையிடம் கீழ்க்கண்ட தோழர்கள் பணமுடிப்புகள் அளித்தனர்.

தி. மு. வாலிபர் கழகம் 153 அணா.

தி. மாணவர் மு. கழகம் 101 காலணா.

தி இளங்கோவன் 101 அரையணா.

மாணவன் எஸ். சம்பந்தன் 101 காலணா.

தேழியா கோ. அங்கம்மாள் 101 காலணா.

சிறுகுழந்தை திராவிடமணி ரூ 1-1-3

இரவு 11 மணிக்கு பொள்ளாச்சி பொதுக் கூட்டம், தோழர்கள் சொற்பெருக்குக்குப் பின் சிறப்புடன், முடிவுற்றது. கூட்டம் முடிந்ததும் யாவரும் ஆனைமலைக்குப் புறப்பட்டனர்.

நள்ளிரவில் பொதுக் கூட்டம்!

தோழர்கள் யாவரும் ஆனைமலை சேர்ந்தனர். இரவு நெடுநேரமாகியிருந்தும் கூட அளவற்ற மக்கள்கூட்டம்திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளரின் சொற்பொழிவைக் கேட்கத் திரண்டிருந்தனர். நள்ளிரவாகியும், பனி பெய்து கொண்டிருந்தும், பொது மக்கள் ஆர்வம் ததும்பக் கூடியிருந்தனர்.

தோழர் பழனிச்சாமி தலைமையில பொதுக் கூட்டம் துவங்கியது, தோழர்கள் அண்ணாத்துரை, சம்பத் ஆகியோர் பேசிய பின் சுமார் 12½ மணிக்குக் கூட்டம், கழக வாழ்த்தொலிகளுடன் கலைந்தது.

கோவைசுற்றுப்பயணம்

இரண்டாம் நாள்

திருப்பூர், நவ. 8—

நேற்று காலை 10½ மணிக்கு தோழர்கள் அண்ணாத்துரை, காஞ்சி வி. பி. சாமி, பழனிச்சாமி, எஸ். ஆர். சுப்பிரமணியம் ஆகியோர் இங்கு வந்து சேர்ந்தனர். உடன், தோழர் சி. என். ஏ. திருப்பூர் நஞ்சப்பா உயர்நிலைப் பள்ளியில தலைமையாசிரியர் தலைமையில மாணவர்களுக்கு அறிவுரையாற்றினர்.

உயர்நிலைப்பள்ளியில் சொற்பொழிவு

அது முடிந்ததும் நண்பகல் 12 மணிக்கு திருப்பூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் தோழர் சி. என் அண்ணாத்துரை சொற்பொழிவாற்றினார்.

குறள்நெறி'

உடன் நேராக திருப்பூர் சுப்பிரமணியம் செட்டியார் உயர் நிலைப்பள்ளியில்தலைமை ஆசிரியர் தோழர் நரசிம்ம அய்யங்கார் தலைமையில் தோழர் அண்ணாத்துரை "குறள்நெறி" என்பது பற்றிப் பேசினர்.

அடுத்த படியாக, திருப்பூர் உபகாரச்சாமி பள்ளியில, மாணவர்களுக்கு, அறிவுரை வழங்கினர்.

தோழர் அண்ணாத்துரையவர்கள் பள்ளிக்குவந்ததை அறிகுறியாக, மேற்படி பள்ளிக்கு அரை நாள் விடுமுறை அளிக்கப்பட்டது.

சென்னிமலையில் துவக்க விழா

இரவு 10 மணிக்கு திருப்பூர் தோழர் எஸ் ஆர் சுப்பிரமணியம் தலைமையில் சென்னிமலையில் தி. மு. கழகத்துவக்க விழா நடைபெற்றது.

தோழர்கள் பழனிச்சாமி, சம்பத், அண்ணாதுரை ஆகியோர் பேசினர்.

மூன்றாவது நாள்

பெருந்துறை, நவ 9—

நேற்று பகல் 11 மணிக்கு தோழர்கள் யாவரும் இங்கு வந்து சேர்ந்தனர். பெருந்துறை திராவிட முன்னேற்ற கழகத் துவக்கவிழா. தோழர் பழனிச்சாமி தலைமையில நடைபெற்றது. தோழர்கள் சம்பத், அண்ணாதுரை, ஆகியோர் பேசினர். பிறகு அங்கிருந்து புறப்பட்டு ஈரோடு சென்றனர்.

ஈரோடு பொதுக்கூட்டம்.

தோழர்கள் யாவரும் தோழர் ஈ. வே. கி. சம்பத் இல்லத்திற்கு வந்துசேர்ந்தார்கள். மாலை 4 மணிக்கு தோழர் ஏ. சங்கரய்யாவால் தோழர்களுக்கு நல்லதொரு தேனீர் விருந்து அளிக்கப்பட்டது.

பின், காரைவாய்க்கால் மைதானத்தில், தி. மு. கழகக் கொடியைத் தோழர் பழனிச்சாமி ஏற்றுவித்தார். ஈரோடு முனிசிபல் கவுன்சிலர் தோழர் எஸ். ஆர். சந்தானம் தலைமையில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது, தோழர்கள் எஸ். அ பாவு, எல். ஈ பாலகுரு, தோழர் அண்ணாதுரை ஆகியோர் பேசினர் பெருந்திரளான மக்கள் கூடியிருந்தனர்.

இரவு தோழர் ஆர். டி. முத்து இல்லத்தில, தோழர்கள் யாவருக்கும் விருந்தளிக்கப்பட்டது.

இன்று 9-ந் தேதி மாலை தோழர்கள் சம்பத், காஞ்சி, வி. ப. சாமி, அண்ணாத்துரை ஆகியோர் ஈரோட்டிலிருந்து புறப்பட்டு திருச்சி சென்று, தோழர்கள் சங்கரன், சம்பு ஆகியோரைச் சந்தித்து வழக்கு குறித்து கலந்தாலோசித்துவிட்டு அங்கிருந்து காஞ்சிக்குப் புறப்பட்டனர். இடையில் விழுப்புரம் டாக்டர் தியாகராசன் இல்லம் சென்று, இயக்க சம்பந்தமாக அவருடன் உரையாடிவிட்டு 10-ந் தேதி காலை யாவரும் காஞ்சிபுரம் வந்து சேர்ந்தனர்.

இனி நடப்பவை

வேலூர்—13.11 49 ஞாயிறு மாலை 6மணிக்கு இவ்வூர் கோட்டை வெளியில் தி. மு. கழகப் பொதுக் கூட்டமொன்று நடைபெறும். அதுபோது, முல்லைத்தோழர் எம். பி. வடிவேல் அவர்கள் தலைமையில் தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்கள் பேசுவார்கள்.

* * *

சென்னை—சென்னை, ஜூலை வள்ளுவர் மாஜன சங்கத்தின் சார்பாக 13—11—49 மாலை 6 மணிக்கு ஓர் கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர் கோ. ர மலிங்கம் அவர்கள் தலைமையில் தோழர்கள் சி. முனுசாமி, பி. எ; சி. விஸ்வலிங்கம் ஆகியோர்முறையே, 'வள்ளுவர் குறள்' சமூக வளர்ச்சி என்பன பற்றி சொற்பெருக்காற்றுவர். இடம்:— ஜூலை, டிமல்லஸ் ரோடு, ஏகாத்தம்மன் கோவில் சந்து.

* * *

சென்னை — 14.11.49 திங்கள் மாலை 6 மணிக்கு, சென்னை குறள் நடிகர் குழுவினரால் சென்னை வி. பி. ஹாலில் "கருணாநிதி" என்னும் சமூக நாடகம் நடைபெறும். தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்கள் நாடகத்திற்குத் தலைமை வகிப்பார்கள். நாடகத்தன்று காலை 10 மணி முதல்ஹாலில் டிக்கட் விற்கப்படும்.

* * *

சேலம்—சேலம் மேற்கு வட்டம் செவ்வாய்ப்பேட்டை தி. மு. க. நகர உட் கிளையின் துவக்க விழா 13-11-49 ஞாயிறு காலை 9-மணிக்கு செவ்வாய்ப்பேட்டை லாங்லி ரோடில் நடைபெறும். தோழர்கள் டி. கே. சீனிவாசன், மு. கருணாநிதி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

சென்னை— சென்னை, பச்சையப்பன் கல்லூரித் தமிழ் மன்றத்தின் சார்பில் நடைபெற்று வரும் கலை விழாவில், 12-11-49 சனி மாலை 5-30மணிக்கு ஓரங்க நாடகப் போட்டியும், 13-11-49 ஞாயிறு காலை 10-மணிக்கு சமய ஆசைப் போட்டியும, அன்றும் மாலை 5-30 க்கு தோழர் எம். கே. தியாகராஜ பாகவதர் குழுவினரால் இன்னிசை விருந்தும, 14-11-49 மாலை 5-30-க்கு கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் குழுவினரால் "கிந்தனார்" கதை விருந்தும நடைபெறும்.

பெவான் இந்தியா வருகை

பிரிட்டிஷ் சுகாதார மந்திரி தோழர் பெவான் ஜனவரி மாதத்தில் இந்தியாவுக்கு வருகை தருவாரென்றும், இங்கு மூன்று மாத காலம் சுற்றுப்பயணம் செய்வாரென்றும் தெரிகிறது. இந்திய சர்க்காரின் அழைப்பின் பேரிலேயே அவர் வருகிறாராம்.

ஆசியாவில் மூன்றுவது...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

-ஒத்துழைப்பால்—பொருள் உதவியால்—சீன மக்கள் பெற்ற வாழ்வு பெருமைக்குரியதாக இல்லை என்பது, நம் கண்ணுக்கு நேராக நடந்த சம்பவங்களிலிருந்து, எவரும் விளக்கமாகத் தெரிந்து கொள்ளலாம். அதனால் சீன மக்கள் பட்ட தொல்லைகள் எவ்வளவு? பெற்ற வறுமைக்கு ஏதாவது வரம்பு இருந்ததா? சியாங்கின் கொள்ளைக் கூட்டமன்றோ, அமெரிக்காவின் பொருள் உதவியினால் பொலிகாளைபோல் கொழுத்துக் கொண்டு இருந்தது. சியாங்கின் செல்வாக்குத் தேயத்தேய, முன்னணியில் தம்மால் பெருமையாகப் பேச பட்டு படையுதவியும் பெற்றவாயிற்றே என்பதையும் எண்ணிப்பாராமல், இழித்துப் பழித்து ஏசவும் முன்வந்ததல்லவா அமெரிக்கா! அமெரிக்காவின் உதவியால் சியாங் பெற்றது ஆசியாவின் தலைமைப் பீடமல்ல! தலைதப்பிப் பிழைத்தால் போதுமென்ற நிலைமை! இது வரலாறு, மறுக்க முடியாத அளவில் இருக்கிறது.

வரலாறு வெறும் சம்பவங்கள் காட்டும் நாட்குறிப்பு அல்ல. மக்கள் இனவளர்ச்சியின் காரண காரியங்களைக் காட்டும் கருத்துரை நிறைந்த பொக்கிஷம். சிந்தனைத் திறம் படைத்தோர், சொந்தப் புகழைப் பெரிதென மதிக்காத நேர்மதியாளர், செயலாற்றப் புகுமுன், திருப்பித் திருப்பிப் படித்துப் பார்த்துக்கொள்ள வேண்டும் அந்த ஏட்டை.

கோமிண்டாங் மங்கி மடிந்து போகவே, அது ஆசியாவில் காலி செய்துவிட்ட இடத்தை. துணைக்கண்டமான இந்தியா, பிடிக்கப் பரபரப்புக்காட்டுகிறது மேலோட்டமாகப் பார்த்தால் இது பெருமைக்குரியதாகவும், வெற்றிதரக்கூடியதாகவும் தோன்றக்கூடும். பெரும் நிலப்பரப்பும், தொகை கூடிய மக்களும், அதற்கான ஆசைகொண்டிருப்பவர்களும் இருப்பது மட்டும் போதாது, ஆசியாவிற்குத் தலைமைவகிக்க! அதற்கு, அமெரிக்காவின்உதவியாலும் நற்பயன் விளையாது! நமது ஆசைக்கு அசைக்கமுடியாத மற்றொரு பெருந்தடையும் இருக்கிறது அதுதான் சிவப்புச் சீனு. வாழ்த்தாலும் வரவேற்புபசாரத்தாலும் கோணாத, வளையாத உருக்கு இரும்பு உள்ளம்கொண்டது சீனு இந்த மாபெரும் உண்மையை மறந்து நாம், அந்த மற்ற" அவசியம் ஒரு துளியுமில்லாத" ஆசியாவின் தலைமைக்கு ஆசைவைத்துக்கொண்டு இருப்பது, மீளமுடியாத ஆபத்தில் நமது மக்களைக் கொண்டுபோய் அழுத்தி அழித்துவிடும்.

கோமிண்டாங் ஆட்சித்தொழிந்ததும், ஏமாற்றமடைந்த அமெரிக்கா, இந்தியாவின் தோள்மீது அமர்ந்து, ஆசியாவில் சுரண்டல் பணிபுரியலாம் என்று திட்டமிட்டுவிட்டது. முதலில் வீசப்பட்ட வலை செப்பனிட முடியாத அளவுக்கு, பொதுஜன எழுச்சியால், நூல்நூலாக பிய்த்தெறியப்பட்டு விட்டே இரண்டாவது வலையை இந்தியா மீது வீசியது. இந்தியாவிற்கு "ஏற்றம்"தேடும் கற்பனையில் ட்ரூமென் மூழ்கினார். பண்டிதரின் அமெரிக்கப் பயணம் அதன் விளைவு.

இந்தியாவின் 'கௌரவம்' இன்று உயர்ந்திருக்கிறது! இந்திய மக்களின் சராசரி வாழ்க்கைத்தரம், குகை ஆளவோடு நின்றிருக்கிறது!

அடுத்தவலை வீசப்படுகிறது பாகிஸ்தானைப் பிடிக்க! வெற்றி கிட்டினாலும் கிட்டலாம், தோல்வி ஏற்பட்டாலும் ஏற்படலாம். பண்டிதரின் அமெரிக்கப்பயணம் வெற்றி (?) யாக முடிந்து, இங்குள்ள பூசாரிகளின் மனம் குளிர்ந்து, பூஜை மஹோபாவிகளின் மனம் மகிழ்ந்து, இந்தியாவின் 'கௌரவம்'உயர்ந்துஇவ்வளவும் நீ பூக்காது இருக்கும் நிலையில, பாக்கிஸ்தான்பிரதமருக்கு அமெரிக்கா அழைப்பு அனுப்பதுலோ அத்துக்கொண்டு இருப்பது, கொஞ்சம் அதிருப்தியைத்தான கொடுக்கக்கூடு. ஆனதல் பெற வேண்டுமென்றும் அவர்களை நாம, அமெரிக்காவின் விருப்பதை தடுக்க ஆத்ம சக்தி மட்டும் போதாது, அதற்கு அணுகுண்டு தேவைப்படுகிறதே என்ற காரணத்தால்!

காங்கிரசுக்கு 'சாபல்யம்!'

சனாதனமும் நுழைகிறது!

இந்து மகாசபை சென்னைக்கிளை முன்னாள் தலைவரும் பிரபல 'சனாதனி'யுமாகிய தோழர் கே. எஸ். ராமசாமி சாஸ்திரியார் காங்கிரஸில் சேர்ந்து விட்டதாகத் தகவல் கிடைக்கிறது. இதில் புதுமையோ, ஆச்சரியமோ எதுவுமிருப்பதாக நமக்குத் தோன்றவில்லை. சாஸ்திரியாரைப் போன்றோர் ஒன்று சனாதனச் சங்கத்திலிருக்கவேண்டும்; அல்லது சுயராஜ்ய சங்கத்திலிருக்க வேண்டும் இதுவரை சனாதன சங்கத்திலிருந்தார்; இப்போது (ஆர் எஸ்.எஸூம் காங்கிரஸ் உருக்கொண்டதால்) சுய ராஜ்ய சங்கத்தில் சேருகிறார். இதனால் சாஸ்திரியார் எப்படி யென்பது நிர்ணயமாவது ஒரு புறமிருக்க, காங்கிரஸ் எப்படி, எங்குசென்றுகொண்டிருக்கிறதென்பதும் வெள்ளிடை மலையாகிறது சாஸ்திரியார், தான் மட்டும் காங்கிரஸில் சேர்ந்ததோடு நின்று விட்டால் 'சுய நலக்காரர்' என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாவார்! காங்கிரஸூம் கண்ணீர்ப் பெருக்கும்! எனவே, நாட்டிலுள்ள வேத—வேதாந்த—பிரம்மச்சாரிய — முன்சிரேஷ்ட— பிராம்மணோத்தமர்களையும், மற்ற வைதீக சிரோன்மணிகளையும் அழைத்துக் கொள்ளவேண்டும். அட போதுதான் புகுந்த இடத்துக்குப் 'புண்யம்' தேடியவராவார் சாஸ்திரியார்! காங்கிரஸூம் 'சாபல்யம்' பெறும்!

'டெல்லியார்' தயவை நோக்கித் தவஞ்செய்து கிடப்பதா?

உற்பத்திப் பெருக்கத்துக்கு ஊராள்வோர்செய்யவேண்டியதென்ன?

சென்னை மாகாணம் நீர்வளம், நிலவளம் பொருந்திய நாடு. உழவுத் தொழிலுக்கே உறைவிடமாக விளங்கும் நாடு. இப்படிப்பட்ட நாட்டில் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது இன்று; இதனைப் போக்க உற்பத்தியைப்பெருக்குங்கள் என்று மக்களைப் பார்த்து ஓயாது கூறுகின்றனர் நமது ஆட்சியாளர்கள் ஆனால் உற்பத்திப் பெருக்கத்திற்கென அரசியலார் செய்த, செய்கின்ற உருப்படியான காரியம் இன்னது என்பதுதான் நமக்குப் புரியவில்லை. உற்பத்தியைப் பெருக்குங்கள் என்று உபதேசம் செய்ய ஒரு சில உத்தியோகஸ்தர்களை உற்பத்தி செய்து அவர்களுக்குச் சம்பளம் என்ற முறையிலும் கிணறுகள் வெட்டும் திட்டம் என்ற பெயரிலும் லட்சக்கணக்கான ரூபாய்களை செலவிடுவதும் ஆன காரியங்களைத் தவிர, வேறு பயனுள்ள பணி என்ன செய்கிறார்கள் என்பதுதான் தெரியவில்லை. உற்பத்திப் பெருக வேண்டுமானால் முதலில் உழவர்களின் உள்ளத்தில் ஊக்கம் பெருக வேண்டும். உழவர்களின் உள்ளத்தில் ஊக்கம் பெருக ஆரம்பித்தால் எப்படிப்பட்ட பஞ்சத்தையும் சமாளித்து விடலாம். இன்று நாட்டு உணவுப் பஞ்சத்துக்குக் காரணம் மழையின்மை என்று மட்டும் சொல்லிவிட முடியாது. மழையை எதிர்பாராதிருக்கும் பகுதிகளில் கூட போதிய விளைவு இல்லை என்றால் இதற்குக் காரணம் என்ன? நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் பலருக்கு நிலத்தை உழுது பயிர் செய்வதற்கு வேண்டிய பொருள் வசதியில்லை. இது ஒருபுறமிருக்க, நிலமில்லாத விவசாயிகள் வேறு ஆதரவற்றுத் தவிக்கின்றனர். ஆகவே, உற்பத்திப்பெருக வேண்டுமானால் நிலம் வைத்திருக்கும் விவசாயிகளின் வேதனை, தீர வழி தேட வேண்டும்... நிலமில்லாத விவசாயிகளுக்கு ஆதரவு தரவேண்டியதும் அரசியலார் கடமையாகும்.

நல்ல முயற்சி தான்!

நிலமில்லாத விவசாயிகளுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு சென்னை சர்க்கார் ஒரு மசோதாவைத் தயாரித்துக்கொண்டிருப்பதாக அண்மையில் விவசாய இலாகா அமைச்சர் தெரிவித்தார். அரசியலாரின் இந்த நல்ல முயற்சியை நாம் வரவேற்கிறோம். ஆனால் இத்தகைய முயற்சிகள் நடைமுறைக்கு வர முடியாத அளவுக்கு மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கம் அடிக்கடி குறுக்கிடுவது வழக்கம். இதனால் நம்மாகாணம் தன்னுடைய சொந்த முயற்சியால் எதையும் செய்ய முடிவதில்லை.

நிலமில்லாத விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்பது சென்னை அரசியலாரின் எண்ணம், ஆனால் இந்தஎண்ணம் ஏட்டில்இடம் பெறுவதும், நடைமுறைக்கு வருவதுந்தான் இயலாத காரியம், இந்திய சர்க்கார் இந்தியா முழுமைக்கும் ஒரு திட்டம் வகுத்திருக்கிறதாம். அத்திட்டம் நிறைவேறும் போதுதான் சென்னைக்கும் அதில் கொஞ்சம் பங்கு கிடைக்குமாம். அதுவரையில் காத்திருந்து கஷ்டப்படவேண்டுமாம் நம் மாகாணம்.

இந்த உண்மை கடந்த புதன் கிழமையன்று நடைபெற்ற சட்டசபை நிகழ்ச்சியிலிருந்து தெரிய வருகிறது. விவசாயிகளுக்குநன்மை செய்யும் மசோதா ஒன்றை தயாரிப்பது பற்றிய பேச்சு எழுந்தபோது, சட்டசபை உறுப்பினர் ஒருவர் 'எப்பொழுது இந்தமசோதா வெளிவரும்?' என்று அமைச்சரைக் கேட்டார். ... அமைச்சர், "இந்தியா முழுமைக்கும் நியமித்திருக்கும் கமிட்டியின் அறிக்கை வந்த பின்னரே இந்த மசோதா கொண்டு வரப்படும்" என்று பதிலளித்தார். "நம் மாகாணத்துக்குத் தகுந்த முறையில் உடனடியாக ஒரு திட்டம் வகுக்க முடியாதா?" என்று மற்றொரு கேள்வியை அந்த உறுப்பினர் கேட்டிருக்கிறார். அதற்கு "முடியாது" என்ற பதில் கிடைத்திருக்கிறது. அமைச்சரிடமிருந்து.

இம்மாதிரி பயனுள்ள பணிகளை செய்ய நம்மால் முடியவில்லையென்றால் நமக்குக் கிடைத்திருப்பது சுதந்திரம் என்று எப்படிச் சொல்ல முடியும்? எனவே இம்மாகாணத்தில் உற்பத்தி பெருகா திருப்பதற்கு இருக்கும் பல காரணங்களில் இம்மாகாணத்துக்குப் போதிய சுதந்திரம் இல்லாமையும் ஒன்று ...வென்ன?

மக்களாட்சியில் மாற்றுக்கட்சிகளுக்கு இடமில்லையா?

ஏகபோக ஆட்சியில் ஜனநாயகம் தழைப்பது எங்ஙனம்?

அடக்குமுறைப் பசி அதிகரித்தால்....?

"ஒரு நாயைக் கொல்லவேண்டுமானால் அதற்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று சொல்லி அதைக் கொல்ல வேண்டும்" என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. அதுபோல நமது மாகாண ஆட்சியாளர்கள் மாற்றுக் கட்சிகளை மட்டந்தட்ட ஏதேதோ பொருந்தாக் காரணங்கள் காட்டி சட்டங்களை நீட்டித் தமது விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ளப் பார்க்கின்றனர்.

அமைதிக்குப் பங்கம் விளைவிக்கின்றனர் என்று சொல்லி கம்யூனிஸ்டு கட்சியை சட்ட விரோதமான ஸ்தாபனம் என்று முடிவு கட்டினர் அமைதிக்குப் பங்கம் நேருகிறதென்றால், அதற்குக் காரணம் என்ன என்பதைக் கண்டறிந்து அதனை அகற்றவேண்டும். மக்கள் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் இவற்றால் அல்லற்படும்போது நாட்டில் அமைதி நிலவும் என்று எதிர்பார்ப்பது சற்று கடினமே அப்படியின்றி யாரோ சில பலாத்காரத்தைக் கையாண்டு அரசியலாருக்குத் தொல்லை விளைவிக்கின்றனர் என்றே வைத்துக் கொண்டாலும், அப்படிப்பட்ட நிலைமையைச் சமாளிப்பதற்காகவே போலீசும், இராணுவமும் உள்ளன. இந்தத்தற்காப்புப் படைகளைப் பயன்படுத்தி அமைதியை பாதுகாக்கலாம் இதுதான் ஜனநாயகத்திற்கு ஏற்ற முறை. ஆனால் நமது ஆட்சியாளர்— அஹிம்சையை அடிப்படையாகக்கொண்டு ஆட்சி நடத்தும் அன்பர்கள்-ஜனநாயகம் பேசும் ... சிலர்கள் செய்தது அதுவல்ல அமைதியைக் குலைக்கும் குற்றத்தைக் கம்யூனிஸ்டு கட்சிக்கே உரிமையாக்கி, அதனைச் சட்ட விரோதமான ஸ்தாபனம் என்றனர். இது சரியல்ல, முறையல்ல, நீதியுமாகாது என்று அப்போதே பல அறிஞர்கள் கண்டித்தனர். ஆனால் அவையனைத்தும் கிழலுக்கிறைத்த நீராயிற்று.

அரசியலாரின் ஆப்பாட்டம் அத்துடனாவது நின்றதா? இல்லை. நாம் மேலே எடுத்துக் காட்டியுள்ள பழமொழிக்கேற்ப "கம்யூனிஸ்டு கட்சி சட்ட விரோதமான ஸ்தாபனமாகையால் தேர்தலில் கலந்துகொள்ள உரிமையில்லை" என்று கூற ஆரம்பித்திருக்கின்றனர். இது அகில இந்திய காங்கிரஸ் தலைவர் தோழர் பட்டாபி சீதாராமையா அவர்களின் பேச்சின் மூலம் வெளியிடப்படுகிறது. அண்மையில் நாக்பூரில் நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார் அவர். "தேர்தலை முன்னிட்டு கம்யூனிஸ்டு கட்சி மீதுள்ள தடையை நீக்கி அதனைத் தேர்தலில் பங்கு கொள்ளும்படி செய்ய முடியாது" என்று கூறியிருக்கிறார்.

இதிலிருந்து தேர்தலில் கம்யூனிஸ்டு கட்சி போட்டியிடுவதைத் தடுக்கவே, அக்கட்சிமீது இத்தகைய அடக்குமுறை பாணம் வீசப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் நினைக்க இடமேற்படுகிறது. இங்ஙனம் தம்மோடு போட்டியிட மாற்றுக் கட்சிகளுக்கு இடந்தராமல் அடக்குமுறை அம்புகளால் அணைபோட்டுவிட்டு ஆட்சி நடத்தும் ஒரு ஏகபோக ஆட்சியை எங்ஙனம் ஜனநாயகம் என்று ஒப்புக்கொள்ள முடியும்?

பலாத்காரம் கூடாது என்பதை வலியுறுத்துவதில் நாம் யாருக்கும் பின்வாங்கியவர்களல்ல. என்றும் அமைதியே நமது குறிக்கோள். ஆனால் அமைதிக்கு வழி இத்தகைய அடக்குமுறைகளல்ல என்பதைச் சுட்டிக்காட்டாமலிருக்க முடியவில்லை. அன்று ஏதேதோ பொருந்தாக் காரணங்கள் காட்டி கம்யூனிஸ்ட் கட்சியைத் தடை செய்தது இன்று அந்தத் தடையைக் காரணமாகக் காட்டி தேர்தலில் பங்கு கொள்ளும் உரிமையையும் பறித்துவிட முயலும் ஆட்சியாளரின அடக்குமுறைப் பசி இத்துடன் அடங்கிவிடுமென அப்படி நாம் நம்ப முடியும்? மற்ற மற்றக் கட்சிகளும் இதே பசிக்கு இரையாகநேர்ந்தாலென்னவது? அப்புறம் ஜனநாயகத்தை நம்பி வாழும் மக்களின்கதிஎன்னாகும், எவ்வளவு காலம் நினைக்கும்போது வருந்தாமலிருக்க முடியவில்லை. ஜனநாயகத்தில நாம் ஆழ்ந்த நம்பிக்கை வைத்திருக்கின்ற காரணத்தால்.

ஆட்சியாளருக்கு...

[1-ம பக்கத்தொடர்ச்சி]

தொடர்ந்து குறிப்பிட்டதாவது:—

" சர்க்காரொன்றுக்குரிய ஸ்தாபனங்களோ வசதி வாய்ப்புகளோ கம்யூனிஸ்ட்களுககுக கிடையாது; அப்படியிருந்தும சிற்சில விஷயங்களில அவர்கள போலீசைக் காட்டிலும், இன்னும் மற்ற அதிகாரிகளைக காட்டிலும் அறிவுததிறனும்பெற்றுவிளங்குகிறார்கள. நிலமையை இப்படி நீடிககவிடுதல நல்லதல்ல."

"பறபல நபர்களைப் பாது காவலில வைப்பதற்கு மட்டுமே அதிகாரங்களைப் பயன் படுததல் கூடாது. உண்மையான குற்றவாளிகளைக் கண்டு பிடிகக இயலாத காலத்திலுங் கூட இவவதிகாரங்கள் பயன் படுததபபடுகின்றன இது கூடாவே கூடாது"

மசோதா திருத்தத்துடன் நிறைவேறியது. மேல் சபையின் ஆலோசனைக்கு இது 14-ந் தேதியன்று வருகிறது.

சமதர்மக் குடியரசை நிறுவுவதே தி. மு. கழகக் குறிக்கோள்

பங்கீட்டு முறையை ஒட்டியதே வகுப்புவாரிமுறை

முத்துப்பேட்டையில் ஆசைத்தம்பி-நடராசன்

முத்துப்பேட்டை, நவ. 7—

நேற்று மாலை இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழகத் துவக்கவிழா தோழர் டாக்டர் டி. என் சிவசங்கரன் தலைமையின் கீழ் மிகச் சிறப்பாக நடந்தேறியது. கூட்டத்திற்குச் சுற்று வட்டத்தில் உள்ள இயககத் தோழர்களும் பொது மக்களும் ஏராளமாக வந்திருந்தனர். தலைவர் முன்னுரையாக துவக்க விழாவின் குறிக்கோளை விளக்கிய பின், தோழர் தர்மலிங்கம் அதைச் தொடர்ந்து சிறிது நேரம் பேசினார்,

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

அடுத்து விருதுநகர் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி பேசியதின் சுருக்கம் :—"பெரியாரின் திருமணத்தின் காரணமாகத் தோன்றிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூலக் கட்சி, பார்ப்பனரல்லாதார் கட்சியாகும். இக்கட்சி தோன்றியதற்குக் காரணம் பார்ப்பனர்களே. பார்ப்பனர்கள் சமுதாயத் துறையிலே பிறரை மிகவும் கேவலமாக இழிவுபடுத்தி, மனிதத் தன்மையையும் மறந்து கொடுமைப்படுத்தினார்கள். அந்த அக்கிரமத்தை ஒழிக்கவே பார்ப்பனரலலாதார் கட்சி தோன்றியது. அதற்குத் துணையாக பிறகுதான் சுயமரியாதை இயக்கம தோன்றியது. இரண்டும் சேர்ந்து தென்னாட்டவருடைய உரிமைக்காகவும், நீதிக்காகவும் பாடுபட்டன.

பதவி ஏன்?

சட்டசபைக்குச் செல்வதில் காங்கிரஸ் பால் குடியாத பூனையாக இருந்தகாலத்தில், ஜஸ்டிஸ் கட்சி பதவி ஏறு இரட்டையாட்சியைத் திறம்பட நடத்தியது. பதவி ஏற்றது மோகத்தால் அல்ல; தமிழர்களின் காகதத்தான். அந்தக் காலத்தில் இன்றுள்ள நிலைமையைவிட அதிகமாக எங்கும் பார்ப்பனர்களே உத்தியோகததில் ஒட்டிக்கொண்டிருந்தனா. இதற்குக் காரணம் பார்ப்பனர்களுக்கு அந்தத் தகுதி இருந்தது என்பதல்ல. வியாபாரம செய்ய வந்த வெள்ளையனுக்கு நல்ல பிள்ளையாக நடித்தார்கள் அதனாலேயே அவாகள் ஆதிக்கத்திற்கு வெள்ளையன் வழி செய்தான். எதிர்த்த நாம ஏமாற்றப்பட்டோம்; எதிர் கொண்டழைதத அவர்கள் ஏற்றங்கொண்டனர். இதைத தடுத்த தமிழர்களைத் தக்கபடி உயர்த்த பதவி ஏற்பது அவசியமாயிற்று. எனவே ஜஸ்டிஸ் கட்சி பதவி ஏற்றது.

செய்த சேவை

பதவி ஏற்ற ஜஸ்டிஸ் கட்சி படுத்துறங்கவில்லை. திராவிடர் நலனுககேற்றபடி சட்டங்களை மாற்றியது. சமஸ்கிருதம் படித்தால்தான் டாக்டராக வரமுடியும் என்ற சட்டத்தை ஒழித்தது. அதற்குப் பின்தான் திராவிட டாக்டர்கள் அதிகம் வரமுடிந்தது. அடுத்து திராவிடர்களுக்கும் உத்தியோகம் கிடைக்க வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தைக் கொண்டுவந்தது நம்மவர்கள் இன்று உத்தியோகத்தில் ஏதோ ஓரளவு இருக்கிறார்கள் என்றுசொன்னால், அதற்குக் காரணம் ஜஸ்டிஸ் கட்சியின் சேவையே

பங்கீடு தீங்கானதா?

வகுப்புவாரி பிரதிநிதித்துவம் இருந்தால் தங்களுக்கு அதிகப் பதவி கிடைக்காது என்பதை உணர்ந்த ஆதிக்க வகுப்பினர், ஏதேதோ செய்து அம்முறையை ஒழிக்கப்பார்க்கிறார்கள். இவர்களோடு நம்மில் சிலர் கூட சேர்ந்து கொண்டு. வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வகுப்புவாதமானது என்று வகைகெட்டுப் பேசுகிறார்கள். இன்று அரிசிப் பங்கீடு எங்கும் இருக்கக் காண்கிறோம். இது ஏன்? உணவு உற்பத்தியில் பற்றுக் குறை வருகிறபோது பணக்காரன் அதிகமாகச் சேமித்து வைத்துவிடாமல், தடுத்து சமமாக எல்லோருக்கும் பங்கிடு செய்யவே இந்த முறை. பங்கீடுமுறை இருப்பதால்தான் பாட்டாளி வர்க்கம் ஓரளவு பட்டினி இன்றி வாழமுடிகிறது. அதேபோலதான் உத்தியோகத்திலேவகுப்புவாரிபிரதிநிதித்துவம் எனபது ஓர் பங்கீடு முறை. இது யாருக்கு என்ன தீங்குதரு? பின் ஏன் ஆதிக்க வகுப்பினர் கூச்சல் போடவேண்டும்? பேராசை தானே? அதற்காக திராவிடர்கள் இரையாவதா? உணவுபற்றாக்குறை நேரத்தில் பங்கீட்டு முறை எப்படி அவசியமோ, அதே போலதான் உத்தியோகத்திலும் அவசியம் நல்ல நிலைக்கு நாம்வரும்வரை வகுப்புவாரி பிரதிநிதித்துவம் இருந்து ஆகவேண்டும்.

தனியரசுபெற...

இன்றைய ஆட்சியிலே மக்களுக்கு இன்பம் இல்லை. இன்பம இருக்கமுடியாது. காரணம். நமக்குத் தேவையான பணமெல்லாம் இன்றைய ஆட்சி அமைப்புப்படி வடநாட்டுக்கு வரியாக ஏற்றப்படுகிறது, நன்மை செய்ய பணமில்லை; பட்ஜெட்டிலே துண்டு விழுகிறது; கடன்கேட்டோம் வடநாட்டில்; கிடைக்கவில்லை. நம பணம் நம் நாட்டைவிட்டு செல்லாமல் இருக்குமானால், வரிப்பளு இராது; வறுமை இருக்காது; வற்றாவளம் பெறும். இதனையும் செய்ய வேண்டுமானால் திராவிடம் தனியரசாக வேண்டும் அப்போது தான் நல்லாட்சி காணமுடியும். அத்தகைய அரசு அமைக்கவே திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபடுகிறது. உங்களுடைய பரிபூரண ஆதரவை இக் கழகத்திற்குத் தர வேண்டும்"—என்பதாக ஒரு மணி நேரம் பேசி முடித்தார்.

என். வி. நடராசன்

பின் சென்னைத் தோழர். என். வி. நடராசன் 1-30 மணி நேரம் மிக உணர்ச்சியோடு பேசியதின் சுருக்கம்:— "திராவிட சமுதாய விடுதலைப் போராட்டத்தில் தஞ்சை மாவட்டம் முன்னணியல் நின்று வருகிறது. அதில் ஒரு அங்கமான முத்துப்பேட்டையில் நமது புதிய போர்முனையை. ஸ்தாபன ரீதியான முறையுடன் அமையும் திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா கூட்டத்திற்கு நீங்கள் இவ்வளவு மகத்தான ஆதரவு தந்திருப்பதுகண்டு மகிழ்கிறன்.

பழைய கதை

திராவிடர் கழகத் தலைவர் பெரியார் அவர்களின் திருமண காரணமும், எண்ணமும் அதை முன்னிட்டு நாம் பிரிய நேரிட்ட விபரங்களும் இன்று பழைய கதையாகிவிட்டது. தமிழ் நாட்டில் உள்ள அனைவரும் ஏறத்தாழ இதன் விபரத்தை அறிந்தேயிருக்கிறார்கள்.

குடியரசு காண்போம்

திராவிட முன்னேற்றக் கழகத்தற்கு பொறுப்பும் கடமையும் அதிகமாகி விட்டது எனவே மற்றவர்கள் நமகள் கழக வளர்ச்சியைக் கண்டு தூற்றுவதற்குப் பதில் சொல்லிககொண்டிருப்பதல்ல எங்கள் வேலை? நேர்மையும் நீதியும், கொள்கையில் உறுதியும் கொண்டிருப்பவர்கள்யார் என்பதை நாட்டின் உணர்ந்து வருகின்றனர். திராவிட முன்னேற்றக் கழகம் ஏழை எளியோரின் பரிதாபக் கூக்குரலை ஒழித்து, திராவிடத்தில் சமதர்மக் குடியரசை நிறுவவே பாடுபடும.

புது அரசியல்

1950 ஜனவரி 26-ம் நாள் புதிய அரசியல் திட்டம் டெல்லியில் அரங்கேற்றுபடி செய்யப்போகிறார்களாம். இந்த அரசியல் திட்டம் மாகாண உரிமைகளை அடியோடு விழுங்கி, சாதாரண பஞ்சாயத்து போர்டுகள போல ஆக்கியிருக்கிறது நமது மாகாண மந்திரிகள் இதுவரை வடநாட்டு ஆதிக்கததிற்கு சப் எஜண்டுகளாக இருந்து வந்தனா். புதிய அரசியல் திட்டத்தில் சேவகர் போன்று அடங்கி ஒடுங்கி நடக்கவேண்டும். புதிய அரசியல்திட்டம் எனபது முதலாளித்துவத்திற்கு முகமூடியாய் அமைக்கப்பட்டுள்ளதேயன்றி ஏழை மக்களின் வறுமை நீங்க அதிலே வழி இல்லை. இத திட்டம் தயாரிககு செலவு ரூ.2 கோடியாம்.

அற்ப ஆயுசுதான்

இந்தப் புதிய அரசியல் திட்டத்திற்கு அற்ப ஆயுசுதான். நாட்டில் உள்ள முறபோக்குச் சக்திகள் ஒன்று திரண்டு இன்றிலலாவிடினும் ஐந்தாண்டுகளுக்குப் பின இன்றைய பிற்போக்கு ஆதிக்கத்தை ஒழித்து உழைப்பாளிகளுக்குரித்தான, அறிவுடைமை கொண்ட புதிய அரசியலை வகுக்கத்தான் போகின்றனர்.

இன்றைய சுயராஜ்யம்

இன்று சுயராஜ்யம் கிடைத்துள்ளது. ஆனால், அது நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி, காலை முதல் மாலை வரை வயலிலும், தொழிற்சாலையிலும், இரயிலிலும் ஓயாது உழைத்து, வாழ்வில் உருக்குலைந்து வாழும் உழைப்பாளிகளுக்கல்ல. முதலாளித்துவம் என்ற ஆணவத்தையும், ஜாதி இறுமாப்பு என்ற அகங்காரத்தையும், பழமை என்னும் கேட்டினையும், பக்கபலமாகக் கொண்டு உல்லாச வாழ்வு நடத்தும் உலுத்தர்களுக்கே இன்றைய சுயராஜ்யம பயன் தந்துள்ளது. நாட்டின் விடுதலைக்காகச் சேவை செய்த பாட்டாளிகளுக்கல்ல. சொத்து சுகம் அனைததையும் எதிர்பாராமல் போலீஸ குண்டாந்தடிக்கும், துப்பாக்கிப் பிரயோகத்திற்கும் ஆளானவர்களுக்கோ, அவர்கள் சந்ததிக்கோ அல்ல இன்றைய சுயராஜ்யம. நாட்டின் நிலையை மோசமாக்கிய கள்ளமார்க்கெட்காரர்களுக்கும், விலைவாசிகளை உயர்த்தி மக்களின் வாழ்வைச் சிதைத்துவரும் நாசக்காரர்களுக்கும், கொள்கையில் உறுதியற்ற சமயசஞ்சீவிகளுக்கும், விரல்விட்டு எண்ணக்கூடிய முதலாளித்துவ கூட்டத்திற்கு மட்டுமே இன்றையசுயராஜ்யம்சுகத்தை அளித்துள்ளது.

உங்கள் கடமை

இப்படிப்பட்ட காட்டுமிராண்டித்தனமான ஆதிக்கம் அறவே ஒழிந்தால்தான். வந்த சுயராஜ்யம் நாட்டுக்கும் மக்களுக்கும பயன்பட முடியும். மறற நாடுகளைப்போல் நம் நாடும் தலை நிமிர்ந்து வாழ முடியும். வந்த சுயராஜ்யத்தை வடநாட்டு ஏகாதிபத்தியமும் முதலாளித்துவமும் விழுங்கிவிட்டது. அதை அனைவரும் பயன அடையும்படி செய்ய வேண்டுவது பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள எல்லாத் தோழர்களின் கடமையாகும்.

தேசியத் தோழர்கள்

உண்மையாகவே பொதுத் தொண்டில் ஈடுபட்டவர்கள் எவரும், கட்சியின் பெயர், செல்வாக்கு, அதில் தங்களுக்குள்ள அந்தஸ்து, பலாபலன் ஆகியவைகளுக்காக கொள்கையை விட்டுக்கொடுப்பது கூடாதென்பதை என் அருமை காங்கிரஸ் நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். காங்கிரஸில் உள்ள அனைவருமே பிற்போக்காளர்கள், பதவி வேட்டைக்காரர்கள், என்று நாங்கள் கூறவில்லை. காங்கிரசின் லட்சியம் இன்று சிலரது சொந்த வாழ்வுக்காக, தலைமை பீட ஆதிக்கத்திற்காக, மக்களுக்குக் கூறிய வாக்குறுதிகள் மறுக்கப்படுவது மட்டுமல்லாமல், அவர்கள் அடக்குமுறையால் வதைக்கப்படுகின்றனரே என்று மனவேதனை அடையும் காங்கிரஸ் தோழர்கள் சிலராவது இருக்கத்தான் செய்கிறார்கள். அப்படிப்பட்ட முற்போக்குத் தோழர்கள் அதே இலட்சியம் கொண்டு உழைக்க முன் வந்துள்ள திராவிடமுன்னேற்றக் கழகத்திற்குத் தங்கள் ஒத்துழைப்பைத் தர வேண்டுகிறேன்." என்றும் தற்கால அரசியல் நிலைபற்றியும் விரிவாகப் பேசினார்.

தலைவர் முடிவுரையுடன் செயலாளர் நன்றி கூற, கூட்டம் இனிது முடிந்தது.

(வி-உ)

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

13-11-49

திருப்பத்தூர் (வ. ஆ.) :—	(காலை 9 மணி) சி. என் அண்ணாத் துரை
வேலூர் (வ. ஆ.) :—	(மாலை 6 மணி) சி. என். அண்ணாத் துரை, சி. பி. சிற்றரசு.
காங்கயம் :—	இரா. நெடுஞ்செழியன்.
கடம்பத்தூர் :—	என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன்.
திருத்தங்கல் :—	எம். எஸ். ராமசாமி, எம். எஸ் சிவசாமி, இரா. சு. தங்கப்பழம் டி. ஆவுடையப்பன்.
விருதுநகர் :—	என். எஸ். இளங்கோ, ஏ. வி. பி. ஆசைத்தம்பி.

14-11-49

பவானி :—	இரா. நெடுஞ்செழியன்.

சந்தா

[வெளி நாடு]

மலேயா, பர்மா முதலிய இடங்களுக்கு:—

ஒரு மாத சந்தா	ரூ.	3—0—0
மூன்று மாத சந்தா	ரூ.	9—0—0
ஆறு மாத சந்தா	ரூ.	18—0—0
ஒரு வருட சந்தா	ரூ.	36—0—0

மூன்று மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வி.பி: மூலம் அனுப்ப இயலாது.

மானேஜர் "மாலைமணி"

கழக நடவடிக்கைகள்

மத்தூர்—சேலம் மாவட்டம், மத்தூரில் 16-10-49 அன்று தோழர் க.ர.சேமோறன் அவர்களால் தி.மு. கழகக் கொடி ஏற்றுவிக்கப்பட்டது.

* * *

பெண்ணாடம்— 21-10-49-ல் தி. மு.கழக ஊர்வலமொன்று நடத்தப்பட்டு, கடைத்தெருவில் தோழர் பி. எஸ். சாமிநாதன் அவர்களால் கழகக்கொடி ஏற்றுவிக்கப்பட்டது. ஊர்வலம் தோழர் பி. என். தேவதாஸ் தலைமையில் வந்துகொண்டிருக்கும்பொழுது, போலீசாரால் தடை செய்யப்பட்டு, மீண்டும் அனுமதி பெற்று தொடர்ந்து நடைபெற்றது.

● ● ●

ஆலங்குடி— திருச்சி மாவட்டம், ஆலங்குடி தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம் 24-10-49 ல் தோழர் தம்பிராஜன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, கூடிய விரைவில் தோழர்கள் சி. பி. சிற்றரசு. மு. கருணாநிதி ஆகியோரை அழைத்துக் கூட்டம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

* * *

செருடர்தானி— இவ்வூர் தி.மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம் 22-10-49-ல் நடைபெற்றது. அதுபோது, பொதுக்கூட்ட வரவு செலவுக் கணக்கும் பார்க்கப்பட்டு, சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

* * *

அம்பை—இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம் 26-10-49-ல் கழகக் கட்டடத்தில் நடைபெற்றது. அதுபோது மேலும் செயற்குழுப்பினர்களாக, தோழர்கள் ஏ. சோமசுந்திரம், சேத்திரபாலன், எம். சாகுல்ஹமீது ஆகியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* * *

மதுரை—இவ்வூர் நகர தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம் 30-10-49-ல் தோழர் ப. சுந்தரம் தலைமையில் நடைபெற்றது. துவக்க விழா வரவு செலவுக்கணக்குப் பார்க்கப்பட்டு, பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (செ-ர்)

● * *

சேலம், செவ்வாய்ப்பேட்டை:— இவ்வூர் தி.மு.க. கிளையின் செயற்குழுக்கூட்டம் 29—10—49ல் தோழர் பி. ஆர். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் கூடியது. அதுபோது பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (வி-உ)

● ● ●

திருப்பெண்ணாத்தூர்:— திருப்பெண்ணாத்தூர் (திருவண்ணாமலை) தி மு க கிளையின் சார்பில் நகராண்மைக் கழகத்தலைவர் தோழர் ப.உ. சண்முகம் அவர்களால் 16—10—49 அன்று மாலை தி.மு.க. கொடி ஏற்றுவிக்கப்பட்டது.

* * *

அனகப்புதூர்:— இங்கு, தி.மு.க. கிளையின் சார்பில் 2—11—49ல் வட சென்னைத்தோழர் பி. வி முருகசாமி அவர்களுக்கு புதவை ஊ.டி.டி. யில் ஓர் விருந்து அளிக்கப்பட்டது. அதுபோது கழகப் பாடல்கள் பாடப்பட்டு, ஓர் இன்னிசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

* * *

சென்னை, இருட்டிகுளம்பேட்டை:— இவ்வூர் தி.மு.க. கிளையின் செயற்குழுக்கூட்டம் 2-11-49ல் தோழர் எஸ். பழனிவேலு தலைமையில் நடைபெற்றது. அதுபோது மாவட்டக் கழகப் பிரதிநிதிகளாகத் தோழர்கள் எஸ். இராமமூர்த்தி, கி. இராஜன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. (வி-உ)

● ● ●

செல்வபுரம் (கோவை):— இவ்வூர் தி. மு. கழகக் கூட்டம் 30-10-49ல் தோழர் ஆர். ஆதிசிவம் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (வி-உ)

* * *

உடுமலைப்பேட்டை:— இவ்வூர் தி. மு. க. கிளையின் உறுப்பினர்களின் கூட்டம் 4-11-49ல் கூடியது. அதுபோது கீழ்க்கண்ட செயற்குழு, தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:— தி. வெங்கடாசலம்; துணைச்செயலாளர்:—இரா. தங்கவேல்; பொருள்உறுப்பினர்:— எஸ். மாணிக்கம்; விளம்பர உறுப்பினர்:—என். ரங்கசாமி. ஏனைய செயற்குழுவினர்:—கருப்புசாமி திருஞானசம்பந்தம், பழனிச்சாமி, துரைசாமி ரஜாக், ஆறுமுகம், ஆர். சிவசுப்பிரமணியம். மாவட்டக்கழகப் பிரதிநிதிகளாக, தோழர்கள் நகரசபைத்தலைவர் எம். எஸ். கனகராசன், நகரசபை உறுப்பினர் ஆர். மீனாட்சிசுந்தரம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். (செ-ர்)

* * *

தளவாய்புரம்— இவ்வூர் தி. மு. க. செயற்குழுத் தேர்தல் கூட்டம் 4-11-49-ல் தோழர் ரா. க. அய்யாசாமி தலைமையில் நடைபெற்றது. அதுபோது, கீழ்க்கண்ட செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்- அ. வன்னிய பெருமாள்; பொருள் உறுப்பினர்- பு. கா. ச. காளிமுத்து; விளம்பர உறுப்பினர்- ஏ. எஸ். ஏ. சாமி ஏனைய செயற்குழுவினர்— கு. மு. இராமசாமி, எம். என். இராமசாமி ரா. க. அய்யாசாமி, க. சங்கரநாராயணன், மு. அருஞ்சுனை, மா. அருணாசலம், உ. மா. சின்னசாமி, சோ. ஆதிநாராயணன். பின்பு சில தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (செ-ர்)

● ● ●

சென்னை, சூளை— இக்கிளையின் செயற்குழுக் கூட்டம் 6-11-49 ல் தோழர் பக்தவச்சலம் அவர்கள் இல்லத்தில் கூடியது. மாவட்டக் கழகப் பிரதிநிதிகளாகத் தோழர்கள் பால்வண்ணர், சத்தியசாமி இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பிறகு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (செ-ர்)

* * *

போளூர்— இவ்வூரில் 6-11-49 ஞாயிறு மாலை, தோழர்கள் ஆர். கணேசன், கே. எம். கணபதி, எம். சுப்பிரமணியம், எம். முஹம்மது சாலி, கே. ராமையன் ஆகியோரின் முயற்சியால், தோழர் கூத்தரசன் அவர்கள் விறகு மண்டிக்கு எதிரில் தி. மு. க. கொடியேற்றப்பட்டது. (ஒ-கி)

● ● ●

தாத்தையங்கார்பேட்டை— இவ்வூர் தி. மு. க. செயற்குழுக்கூட்டம் தோழர் எம்.எஸ் என். இராசு தலைமையில் 6-11-49-ல் கூடியது. அதுபோது, தோழர்கள் மு. பெ. முத்துக்கருப்பன், பி. ஆ. முத்துக்கருப்பன், பி. ஆர். முத்துக்கிருஷ்ணன் ஆகியோர் செயற்குழுவில் சேர்த்துக் கொள்ளப்பட்டதோடு, மாவட்டக் கழகப்பிரதிநிதிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர் மு. பெ. முத்துக்கருப்பன் துணைச்செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். (வி-உ)

* * *

கோவை:—நகர திராவிட மாணவர் முன்னேற்றக்கழக செயற்குழு 4 11—49ல் தோழர் மா. செல்லியப்பன் தலைமையில் கூடி, சில தீர்மானங்கள் நிறைவேற்றியது. (வி-உ)

* * *

ஆற்காடு:—“தி. மு. க. உறுப்பினர் சேர்க்கும் புத்தகம் வந்துள்ளது. உறுப்பினராகச்சேர ஆவலுள்ளவர்கள் “கோரளபவன்” விடுதிக்கருகிலுள்ள (பொன்னம்பலம், சென்ட்ரல் நியூஸ் ஏஜண்ட்) பத்திரிகைக்கடையில் வந்து தங்கள் பெயர்களைப்பதிவு செய்து கொள்ளவும்.” எனச்செயலாளர் எழுதுகிருர்.

* * *

துறையூர்— இவ்வூர் தி. மு. க. செயற்குழுக் கூட்டம் 5-11-49-ல் கூடியது. அதுபோது சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (செ-ர்)

● ● ●

சங்கரன்கோயில்— இவ்வூர் தி. மு. க. செயற்குழுக் கூட்டம் தோழர் ஆர். எஸ். ஆறுமுகம் அவர்கள் தலைமையில் 7-11 49-ல் கூடியது. அதுபோது 30-10 49-ல் காங்கிரஸ்காரர்களால் மெயின் ரோடிலும், பஸ்டாண்டு பக்கத்திலும் பறந்துகொண்டிருந்த இரு தி. மு. க. கொடிகள் இறக்கப்பட்டதைக் கண்டித்தும், 2-11-49-ல் திருவேங்கடம் சாலைத் தெருவில் பறந்துகொண்டிருந்த கொடியை போலீசார் இறக்கிவிட்டதைக் கண்டித்தும் மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. (செ-ர்)

● ● ●

புதுவை:—6-11-49ல் புதுவை தி. மு. க. கிளையின் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. தோழர் இராச. பெரியசாமி திராவிட நாட்டுப்பண் பாடிய பின் கூட்டம் துவங்கியது.

தென்னார்க்காடு மாவட்டத்தில் தோழர் அண்ணாதுரை சுற்றுப் பயணம் செய்யும் போது புதுவையில் துவக்க விழா நடத்துவதற்கு ஏற்பாடு செய்வது, இது சம்பந்தமாகத் தென்னார்க்காடு மாவட்டத் தி.மு கழக செயற்குழுவிடம் கடிதப்போக்குவரத்து நடத்தவும் செயலாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இன்னும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (வி-உ)

* * *

திருச்செங்கோடு:—இவ்வூர் தி மு. க. கிளையின் செயற்குழு 6-11 49ல் தோழர் என். கே. பி. வேல் தலைமையில் கூடியது. அதுபோது தோழர்கள் டி. எஸ். தங்கவேலு டி. கே. இராமசாமி, எ. சண்முகசுந்தரம், டி.ஜி. கணபதி என். பி. சதாசிவம். டி. என் இரத்தினசபாபதி, டி. எஸ். பசுபதி, டி. எ. ஐயாவு, டி. எஸ். தமிழு ஆகியோர் கழக வளர்ச்சியைப் பற்றிப் பேசினர் பின்புபல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (வி-உ)

* * *

குன்னஞ்சாவடி— இவ்வூர்த் தோழர் என். இராசன் அவர்கள் இல்லத்தில் தெ. ஆ. மாவட்ட தி மு க. செயற்குழுக் கூட்டம் 4 11-49 ல் நடைபெற்றது. அதுபோது பெரும்பாலான உறுப்பினர்கள் வராததால் 11-11-49-க்கு ஒத்திவைக்கப்பட்டது. (வி.உ)

சென்னை சர்க்கார் தாராளம்!

1947 டிசெம்பரில் நடைபெற்ற கஜெட்டாகாத சர்க்கார் ஊழியர் வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ளாமல் சர்க்கார் சார்பில் கீழ்ப்படிதலுடன் நின்ற சிப்பந்திகளனைவர்க்கும் ரொக்கப் பரிசாக ஒரு தொகை கொடுக்க முடிவு செய்திருப்பதாகச் சென்னைப் பிரதமர் தெரிவித்துள்ளார். இதை என். ஜி. ஓ சங்கத்தார் எதிர்க்கலாம்; ஆனால் வேலை நிறுத்தத்தில் ஈடுபடாதிருந்த சிப்பந்திகளின் நற்போக்கைச் சர்க்கார் பாராட்டாமலிருக்க முடியாது என்று பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியருக்கு முடங்கல்

மறுப்பு அறிக்கை

ஐயா!

பெரியார் சேலம் பொதுக்கூட்டத்தில் பேசும்போது கடிதம் ஒன்றைப்படித்துக் காட்டி, இந்தக்கடிதம் மதுரையில் இருந்து வந்திருக்கிறது. சுமார் 30 கொடிகள் வரை, திராவிடர் கழகக்கொடியை இறக்கி தீ வைத்தும் விட்டார்கள். என்றும் இழிகுணத்தோடு நடந்துகொண்டிருக்கிறார்கள் திராவிடமுன்னேற்றக்கழகத்தார் என்றும் கூறியுள்ளார். இந்தச்செய்தியைப் பெரியார் அவர்களது சொற்பொழிவை நேரிலே கேட்ட சேலம் தோழர் ஒருவர் மூலம் மதுரையிலே அறிந்தோம். ஆயினும் எவ்வளவு மோசமான விதத்திலே திரித்துக் கூறினாலும் சரி, உண்மை வெளியுலகுக்குத் தெரிந்தே தீரும் என்று சும்மா இருந்தோம் ஆனால் விடுதலைப் பத்திரிக்கையிலும் இவ்விதமே பதினைந்து கொடிகளை இறக்கி காலித்தனம் செய்துள்ளதாக வெளி வந்துள்ளது.

உட்கிளைகளில் தீர்மானம் செய்துள்ளபடி அந்தந்தக்கிளைகளில் ஜனநாயகமுறைக்குக்கட்டுப்பட்டு திராவிடர் கழகக்கொடியை அவிழ்த்து விட்டு முன்னேற்றக் கழகக் கொடிகளைக்கட்டியுள்ளனர். திராவிடர்கழகக்கொடியின் மீது என்றுமே வெறுப்பு இருந்ததில்லை. உதாரணமாக, பெரியார் செய்தசெயல் நல்லதாக இருக்குமோ என்னமோ என்று சந்தேகத்தோடு ஆதரிப்பதற்குக் கூட ஆள் இல்லாத இடமான மதுரையின் கீழ்ப்பகுதியில், சந்தைப்பேட்டை கிளை இருக்கிறது. மேற்படி கிளை ஏகமனதாக முன்னேற்றக் கழகத்தை ஆதரிப்பதாகத் தீர்மானித்துள்ளது. கழகத்திலுள்ள கொடி ஒன்றை மட்டும்மாற்றிக் கட்டியுள்ளார்கள். இன்னும் மேற்படி பகுதியில் முக்கியமான இடங்களில் உள்ள கொடிகள் நான்கு அப்படியே இருக்கின்றன. மாற்றிக்கட்டவில்லை இதேமாதிரி இன்னும் பல இடங்களிலும் திராவிடர் கழகக்கொடிகள் பறந்துகொண்டுதான் இருக்கின்றன. வெறுப்பு கொண்டு கொடியை இறக்கி நெருப்பு வைக்கும் அளவுக்குக் காலித்தனம் செய்வதுஉண்மையானால் எப்படி இன்னும்கொடிகள்பறந்துகொண்டிருக்க முடியும்? தவறான செய்திகளை நம்பி துர்பிரசாரம்செய்வது பெரியாருக்கழகல்ல. பெரியாரைப் பின்பற்றும் தோழர்களின் விஷமப்பிரசாரமே இதற்குக் காரணமென்று கருதுகிறேன். இப்படிப்பட்ட தோழர்களைக் கொண்டிருப்பதன் மூலம் இயக்கத்திற்கு மேலும் மேலும் களங்கமே உண்டாகுமெனப்பெரியார் அவர்கட்குத் தெரிவிப்பதோடு, பொதுமக்களும் தோழர்களும் இப்படிப்பட்ட பொய்யைப்பற்றி சரியாகப்புரிந்து கொள்வதற்காகவே இந்த மறுப்பு அறிக்கையை வெளியிடுகிறேன்.

வணக்கம்

மதுரை 81-1-49 — கே. எஸ். ராஜமான், விளம்பர உறுப்பினன், தி. மு. கழகம்.

* * *

சர்க்கரைப் பஞ்சம்

ஐயா!

“நாடெங்கும் சர்க்கரைப் பஞ்சம் சர்வ சாதாரணமாய் பேசப்படுகிறது. சர்க்கரை இருப்பு குறைவால் பஞ்சம் தாண்டவமாடுவதாகக் கூறப்படுகிறது. உண்மை ஊராருக்கு உறுதியாகத் தெரியவில்லை. பஞ்சம் வரக்காரணம் எதுவாயிருப்பினும், இருக்கும்சர்க்கரையைச் சமமாகப் பங்கீடு செய்தால் ஏழை எளியோர் எல்லோருக்கும் கிடைக்கச் செய்யும். ஆனால் சமபங்கீடு இருப்பதாகத் தெரியவில்லை. உதாரணமாக எங்கள் நகரில் பதவி வகிக்கும் பட்டதாரிகளுக்கே அதிகம் கிடைக்கின்றன. ஜில்லா உயர்தர உத்தியோகஸ்தர், அவர்களுடையமனைவியார் பெயரில் 4-11-49ல் 8 வீசை சர்க்கரைக்குப் “பெர்மிட்” கொடுக்கப்பட்டிருக்கிறது. கடையில் சர்க்கரை இருப்புக் குறைவால் 6 வீசை சர்க்கரை பர்மிட்டை மாற்றி வாங்கிக்கொண்டு போயிருக்கிறார்கள். இதுமாதிரி, மேல் உத்தியோகஸ்தர்களே அதிகமான சர்க்கரைகளைத் தங்கள் வீடுகளுக்குச் சேகரித்துக் கொண்டால், சாதாரணமக்களுக்கு சர்க்கரைப் பஞ்சம் ஏன் ஏற்படாது?

சர்க்காரும், மற்ற ஜில்லா அதிகாரிகளும் இதுமாதிரி ஊழல்கள் நடவாதிருக்க கவனித்துக்கொள்வதுடன், எல்லோருக்கும் சர்க்கரை கிடைக்க வசதி செய்ய முன்வருவார்களா?

அன்புள்ள

தேத்தூர் 9-11 49 — டி. டி. வீராகவன், உபதலைவர், நகராண்மைக் கழகம்.

பட்டேலுக்கு வாழ்த்து வேண்டாம்!

விருதுநகர் நகரசபையில் ஆட்சேபம்

விருதுநகர், அக் 31— இன்று காலை 10-30 மணிக்கு இராஜா மாளிகையில் விருதுநகர் நகரசபையின் சாதாரணக் கூட்டம் தலைவர் தோழர் எம். எஸ். பெரியசாமி தலைமையில் ஆரம்பமாகியது. ஆரம்பத்தில் பட்டேல் பிறந்த தினத்திற்கு வாழ்த்துத்தந்தி நகரசபையின் சார்பாக அனுப்பக் காங்கிரஸ் அங்கத்தினர்கள் தலைவரை வேண்டினார்கள். தலைவர் தனக்கு ஆட்சேபணை இல்லை என்றும், மற்றவர்கள் விருப்பம் என்ன என்று கேட்க, சுயேட்சை அங்கத்தினர்களான தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பியும், தோழர் கூ. பொ. மகாலிங்கமும், அது அனாவசிய செலவு எனக் கூறி ஆட்சேபித்தார்கள் தீர்மானம் கொண்டுவந்தால் தோல்வி அடையும் என்று கண்டு கொண்ட காங்கிரஸ்காரர்கள், அந்த யோசனையைக் கைவிட்டார்கள். பட்டேலுக்குத் தந்தி கொடுக்க சுயேட்சை அங்கத்தினர்கள் மறுத்ததற்குக் காரணம், பெரியார் அவர்களுக்கு முன்பொருதடவை நகர சபையின் சார்பாக வரவேற்பளிக்கும்போது, காங்கிரஸ் அங்கத்தினர்கள் பெருந்தன்மைக் குறைவாய் நடந்துகொண்டதுதான் என்று தெரியவருகிறது. (ந.கி)

திராவிட முன்னேற்றக் கழகம்

★

இதுவரையில் தழைத்துள்ள கிளைகள்

303

Printed & Published by I. M Parthasarathy at the Mercantile Press, 2/4[illegible], M[illegible]ri Chetty Street Madras-1